# மலையகக் கூத்துக்களில் பால்நிலைச் சமத்துவம் : ஓர் உள்ளடக்க ஆய்வு

**பிரதீபன், யே., ரகுராம், சி.**
ஊடகக் கற்கைகள் துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
yspradheeban@gmail.com

*கூத்துக்கள் ஒரு இனத்தின் பாரம்பரியம், மரபுகள், பண்பாடு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாகவே காணப்படுகின்றன. இது மட்டுமின்றி கூத்துக்கள் பல வரலாற்றுச் செய்திகளை தெரிவிப்பதாகவும் காணப்படுகின்றன. இவ்வாறாக, பண்பாட்டைப் பறைசாற்றுகின்ற கூத்துக்கள் இன்றளவும் மக்களால் அரங்கேற்றப்பட்டு, ஆடப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. இதில் முக்கிய விடயமாகக் காணப்படுவது, ஆரம்ப காலத்தில் கூத்தினைப் பெருமளவுக்குப் பொழுதுபோக்குப் பாங்கில் கண்டு களித்த மக்கள் பிற்பட்ட காலங்களில் தெய்வீக அம்சம் பொருந்திய கலையாகவும் சடங்குகளுடன் இணைத்தும் அவற்றை நோக்க ஆரம்பித்தனர். இதன் காரணமாகவே இன்றளவும் சாதாரண மக்கள் கூத்துக்களைச் சடங்குகளுடன் பயபக்தியுடனும் செய்து வருகின்றனர். இருப்பினும், கூத்துக்களின் அரங்கேற்றப் பொறிமுறையில் பால்நிலைச் சமத்துவமின்மை ஒரு பெருங்குறையாகவே நோக்கப்படுகின்றது. கூத்துக்களில் பெரும்பாலானவை ஆணாதிக்கத் தன்மை நிறைந்தே அமைந்துள்ளன. இக்கூத்துக்களில் பெண் கதாபாத்திரமேற்று நடிக்க வேண்டிய இடங்களிலும் ஆண்களே பெண் வேடமிட்டுக் கூத்தினை ஆடுகின்றனர். உடலியல் மற்றும் சமூகக் காரணிகளாலும் பெண்களை கூத்துக்களில் ஒதுக்கி வைக்கும் நிலை காணப்படுகின்றது. அந்தவகையில், பெண்கள் ஏன் மலையகக் கூத்துக்களில் புறக்கணிக்கப் படுகின்றார்கள்? பெண்களைக் கூத்துக்களில் ஆட வைப்பதில் காணப்படும் சவால்கள் என்ன? கூத்துக்களில் ஆர்வமுள்ளோர் புறக்கணிக்கப்படும் போது அவர்களின் மனநிலை எவ்வாறு அமையும்? போன்ற கேள்விகளுக்கு விடைகளை கண்டறியும் வகையில், சாமிமலைப் பிரதேசத்தில் காணப்படும் 26 கிராமங்களில் நடைபெறும் 3 கூத்துக்களையும், தொடர்ச்சி யாக பழமை மாறாமல் செய்து வரும் 5 கிராமங்களில் கூத்துக்களைப் பயிற்றுவிக்கும் 5 அண்ணாவிமார்கள், கூத்துக்களில் பெண் பாத்திரங்களை மாத்திரம் ஏற்று நடிக்கும் 5 ஆண் கலைஞர்கள், மேடைக்கூத்துகளில் பாத்திரமேற்று நடித்த 5 பெண்களை மாதிரிகளாக கொண்ட ஓர் உள்ளடக்க ஆய்வாக இது அமைகின்றது. குறித்த மாதிரிகளிடமிருந்து நேர்காணல், குவிவுமைய கலந்துரையாடல் மூலம் தகவல்கள் பெறப்பட்டன. அந்த வகையில் ஆய்வின் முடிவுகளாக, கூத்தாடும் பெண்களை இன்றைய சமூகம் விரும்புவதில்லை, அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகின்றது, அதிலும் திருமண வாழ்க்கைக்குச் சவாலாக கூத்துக்களில் பங்கேற்றல் அமைந்து விடும், திருமணமாகிய பெண்களாக இருந்தால் குடும்பரீதியான பல முரண்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியதாக இருக்கும் என்பன அறியப்பட்டன. எனவே, பெண்களின் எதிர்கால நன்மைக் கருதி அவர்களை கூத்துக்களில் இணைத்துக் கொள்வதில்லை என மக்கள் எண்ணுவது ஆய்வின் மூலம் வெளிக்கொணரப் பட்டுள்ளது. மேலும் கூத்துக்களின் "புனிதத்தன்மையினைக் கருத்திற்கொள்வதும்,*